Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحیم  نحمدہ ونصلی علی رسولہ الکریم  وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 40

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

14 முஹர்ரம் 1439 ஹிஜ்ரி கமரி   5 அஹா 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
5 அக்டோபர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**கொலை போன்ற சூழ்ச்சிகளிலிருந்து நான் காப்பாற்றப்படுவேன் என்று என்னைப் பற்றி பராஹீனே அஹ்மதிய்யாவில் இறைவனின் இந்த முன்னறிவிப்பு இடம் பெற்றுள்ளது. அதற்கேற்ப இன்று வரை என் மீது பல்வேறு தாக்குதல்கள் நடத்தப்பட்ட பிறகும் கூட இறைவன் எதிரிகளின் தீங்கிலிருந்து என்னைக் காப்பாற்றி விட்டான்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**ஐம்பத்தி இரண்டாவது அடையாளம்:** ஆரியர்களுக்கு குருவாக இருந்த பண்டிட் தியானந்தின் குழப்பம் எல்லையைக் கடந்தபோது இப்போது அவரது வாழ்க்கை முடியப் போகின்றது என்று எனக்கு காட்டப்பட்டது. அதற்கேற்ப அதே வருடத்தில் அவர் இறந்து விட்டார். நான் இந்த முன்னறிவிப்பை காதியானில் வசித்து வந்த ஷரம்பத் என்ற பெயரை உடைய ஆரியர் ஒருவரிடம் பண்டிட் தியானந்தின் மரணம் நிகழ்வதற்கு முன்னரே கூறியிருந்தேன். அந்த ஆரியர் இதுவரை உயிருடன் இருக்கின்றார்.

**ஐம்பத்தி மூன்றாவது அடையாளம்:** பிஸம்பர்தாஸ் என்ற பெயரை உடைய இதே ஷரம்பத்தின் சகோதரர் ஒருவருக்கு இராணுவ நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் ஒன்றரை வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது ஷரம்பத் நிம்மதியிழந்த நிலைமையில் என்னிடம் துஆவுக்காக வேண்டினார். பிறகு நான் அவரது சகோதரருக்காக துஆ செய்தபோது கனவில் நான் ஒரு அலுவலகத்திற்குச் சென்றிருப்பதைப் பார்த்தேன். அந்த இடத்தில் கைதிகளின் பெயர் இருக்கின்ற பதிவேடுகள் இருந்தன. அந்தப் பதிவேடுகளில் ஒவ்வொரு கைதி பற்றியும் அவர் கைதியாக இருக்க வேண்டிய கால அளவும் எழுதப்பட்டிருந்தது. அப்போது நான் பிஸம்பர்தாஸின் கைது பற்றி அவர் இவ்வளவு காலம் காவலில் இருக்க வேண்டும் என்று எழுதியிருந்த அந்த பதிவேட்டைத் திறந்தேன். மேலும் நான் எனது கைகளால் அவர் கைதியாக இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்த கால அளவில் பாதியை வெட்டி விட்டேன். அவரது கைது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டபோது வழக்கு தொடர்பான காகிதம் மாவட்டத்திற்கு திரும்ப வந்து விடும். பிஸம்பர்தாஸ் கைதியாக இருக்க வேண்டிய நாட்கள் பாதியாகக் குறைக்கப்படும். ஆனால், அவர் விடுதலை அடையமாட்டார் என்று வழக்கின் முடிவு தொடர்பாக எனக்கு காட்டப்பட்டது. நான் அந்த எல்லா நிலைமைகள் பற்றியும் அவரது சகோதரரான லாலா ஷரம்பத் அவர்களிடம் வழக்கு தொடர்பான முடிவு வெளிப்படுவதற்கு முன்னரே கூறியிருந்தேன். இறுதியில் நான் கூறியது போன்றே நடந்தது.

**ஐம்பத்தி ஒன்பதாவது அடையாளம்:** ஹோஸ்யார்பூரைச் சார்ந்த ஷேக் மெஹர் அலி தொடர்பாக செய்யப்பட்ட முன்னறிவிப்பாகும். அதாவது, கனவில் நான் அவரது வீட்டில் தீ பற்றிக் கொண்டதைப் பார்த்தேன். அதற்குப் பிறகு நான் அதை அணைத்து விட்டேன். இது எனது துஆவினால் அவருக்கு விடுதலை கிடைக்கும் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இந்த முழு முன்னறிவிப்பையும் நான் கடிதத்தில் எழுதி ஷேக் மெஹர் அலிக்கு இது பற்றி தகவல் தெரிவித்தேன். அதற்குப் பிறகு முன்னறிப்பிற்கேற்ப கைதியாக இருக்க வேண்டிய துன்பம் அவருக்கு வந்தது. பிறகு அவர் கைது செய்யப்பட்ட பிறகு முன்னறிவிப்பின் இரண்டாவது பகுதிக்கேற்ப அவர் விடுதலை செய்யப்பட்டார்.

**அறுபதாவது அடையாளம்:** பிறகு ஷேக் மெஹர் அலி தொடர்பாக அவர் இன்னொரு கடுமையான துன்பத்திற்கு ஆளாவார் என்று அவர் தொடர்பாக இன்னொரு முன்னறிவிப்பு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அவர் பக்கவாத நோயால் பீடிக்கப்பட்டார். பிறகு அவரது நிலைமை பற்றி எதுவும் தெரியவில்லை.

**அறுபத்தி ஒன்றாவது அடையாளம்:** எனது சகோதரரான மர்ஹூம் மிர்ஸா குலாம் காதிர் அவர்களின் மரணத்தைப் பற்றிய முன்னறிவிப்பாகும். அதுபற்றி எனது ஒரு மகன் தரப்பிலிருந்து அந்நியல் ஒருவரிடமிருந்து கூறப்பட்ட சொற்றொடரின் வடிவில் எனக்கு இந்த இல்ஹாம் வந்தது. இந்த முன்னறிவிப்பும் கூட ஆரியரான இதே ஷரம்பத்திற்கு அது நிறைவேறுவதற்கு முன்னரே கூறப்பட்டிருந்தது. இந்த இல்ஹாமின் கருத்து இதுவாகும். அதாவது "எனது சகோதரர் திடீரென்ற அகால மரணமடைவார். அது துக்கத்திற்குக் காரணமாக இருக்கும்". இந்த இல்ஹாம் வந்ததும் அதே நாளிலோ அல்லது அதற்கு ஒருநாள் முன்போ நான் குறிப்பிட்டிருந்த ஷரம்பத் அவர்களின் வீட்டில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு அவர் அமீன் சந்த் என்று பெயர் சூட்டினார். மேலும் என்னிடம் வந்து எனது வீட்டில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. அதற்கு நான் அமீன் சந்த் என்று பெயர் வைத்துள்ளேன் என்று கூறினார். நான் அவரிடம் இப்போது எனக்கு இல்ஹாம் வந்துள்ளது. இதுவரை இந்த இல்ஹாமின் பொருள் எனக்கு திறந்து தரப்படவில்லை. இதில் கூறப்பட்டிருப்பது உமது மகனான அமீன் சந்த் ஆக இருந்து விடக் கூடாதே என்று நான் அஞ்சுகின்றேன் என்று கூறினேன். மேலும் நீர் என்னிடம் அதிகமாக வந்து போயிருப்பதால் இறையறிவிப்புகளில் சில சமயம் தொடர்பில் உள்ளவர் தொடர்பாகவும் இல்ஹாம் வருகின்றது. அவ்வாறு சில நேரங்களில் தற்செயலாக நடப்பதுண்டு என்றும் அவரிடம் கூறினேன். அவர் இந்த விஷயத்தைக் கேட்டு பயந்து விட்டார். அவர் வீட்டிற்குச் சென்றதுமே தனது மகனின் பெயரை மாற்றி விட்டார். அதாவது அமீன் சந்த் என்பதற்குப் பதிலாக கோகுல் சந்த் என்று அவனுக்கு பெயர் வைத்தார். அந்த மகன் இதுவரை உயிருடன் இருக்கின்றார். இந்த நாட்களில் ஏதோ ஒரு மாவட்டத்தின் பாதுகாப்புப் பணியில் அவர் ஈடுபட்டு வருகின்றார். அதற்குப் பிறகு இந்த இல்ஹாம் எனது சகோதரரின் மரணத்தின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது என்பது எனக்கு திறந்து தரப்பட்டது. அதற்கேற்ப எனது சகோதரர் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு திடீரென்று இறந்து விட்டார்கள். இதனால் எனது அந்த மகனுக்கு அவரது மரணத்தினால் துக்கம் ஏற்பட்டது. இதற்கிடையில் நான் குறிப்பிட்டிருந்த கடுமையான காழ்ப்புணர்வு கொண்ட

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ் தனது அருளால் M.T.A -வின் மூலமாக அஹ்மதிய்யத்தின் உலகை எவ்வாறு ஒன்று சேர்த்து அவர்களுக்கு செய்திகளைத் தெரிவிக்கின்றான் என்றால், இப்போது காலத்தின் கலீஃபாவின் சுற்றுப்பயணங்கள் தொடர்பாகவும், ஜமாஅத் நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் தொடர்பாகவும் கேட்பதற்கு அவர்களுக்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதில்லை. செய்திகளை அறிந்து கொள்ள ஜமாஅத் பத்திரிகைகளுக்காக அவர்கள் காத்திருக்க வேண்டியதில்லை. மாறாக, உடனுக்குடன் செய்திகள் அவர்களைச் சென்றடைகின்றது. ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், மாநாட்டின் நிகழ்ச்சிகள் மற்றும் அதன் சுற்றுச்சூழல் தொடர்பாக கேட்பவர்கள் தரப்பிலிருந்து சில நேரங்களில் உடனடியாக அவர்களது கருத்துக்களும், உணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்துவதும் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும்போதே நமக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

மனிதன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றான். அவனைப் புகழ்கின்றான். அல்லாஹ் இந்த அருளை வழங்கி எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தை ஒன்று சேர்த்துள்ளான் என்றால், ஒரே சரடில் அவர்கள் கோர்க்கப்பட்டிருப்பதன் வெளிப்படையான காட்சியைக் காண்பதற்கான அழகான ஏற்பாட்டையும் அவன் செய்துள்ளான். இதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதுடன் M.T.A பணியாளர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். அவர்களில் தன்னார்வத் தொண்டர்களும் அடங்குவர். முழு நேரமும் தொண்டு செய்பவர்களும் அடங்குவர். அவர்களுக்கும் நாம் நன்றி செலுத்த வேண்டும்.

M.T.A -வில் காட்டப்படுகின்ற மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பாக மக்கள் தமது கருத்துக்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். இந்நிகழ்ச்சிகளிலிருந்து அவர்கள் பலனும் பெறுகின்றனர். அதில் இன்பமடைகின்றனர். ஆனால், மாநாட்டிற்கு வந்திருந்த அந்நியர்களின் தாக்கங்கள், உணர்வுகள், பணியாளர்களின் தொண்டு தொடர்பாக அவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியது ஆகியவற்றை ஆண்டு மாநாடு நடக்கின்ற சமயத்திலும் காட்டவில்லை. அது பற்றி கூறப்படுவதும் இல்லை. எந்நிலையிலும் இது பற்றி எவரும் தெரிந்து கொள்ள முடியாது. இந்த பணியாளர்கள் தங்களது டியூட்டியைச் செய்வதுடன் அமைதியான ஒரு முபல்லிக் ஆகவும் இவர்கள் செயல்படுகின்றனர். இது பற்றிய செய்தியை M.T.A -வின் Screen -ம் காட்டுவதில்லை. நிகழ்ச்சிளைத் தொகுத்து வழங்குபவர்களும் கூட இதற்குரிய உரிமையைத் செலுத்த முடியாது.

---

இவ்வாறே மாநாட்டில் கலந்து கொள்பவர்களும் தங்களது நடைமுறை மூலமாக விருந்தினர்கள் மீது ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இதைப் பற்றி மாநாட்டிற்குப் பிறகே விருந்தினர்கள் எடுத்துக் கூறுகின்றனர். எனவே, ஆண்டு மாநாட்டின் தாக்கங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பான இந்தப் பகுதியும் கூட மக்கள் முன்னால் எடுத்து வைக்கப்பட வேண்டும். எனவேதான் நான் அவற்றை எடுத்துக் கூறுகின்றேன். அதன் மூலம் உலகிலுள்ள அஹ்மதிகளுக்கு மாநாட்டினால் ஏற்படும் தாக்கங்கள், அந்நியர்கள் மீது எவ்வாறு வழக்கத்திற்கு மாற்றமான நல்விளைவுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது என்பது தெரிய வர வேண்டும். இதன் மூலம் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கும் பணியாளர்களுக்கும் இவர்களின் அமைதியான நடைமுறை ஜமாஅத்தைச் சாராத அந்நியர்களை இஸ்லாமிய போதனைகளுக்கு அருகில் கொண்டு வருகின்றது என்பது தெரிய வர வேண்டும்.

பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த விருந்தினர்களுக்கு ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு ஏற்பட்ட தாக்கங்கள் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

அல்லாஹ்வின் அருளால் மாநாடு பலரது நெஞ்சங்களையும் திறக்கின்றது. பலரது சந்தேகங்களையும் அகற்றுகின்றது. இஸ்லாத்தின் உண்மையான படம் அவர்கள் முன்னால் வருகின்றது. அல்லாஹ் இந்த அருள்களை எப்போதும் பரப்பிக் கொண்டே செல்வானாக.

ஜெர்மனி ஆண்டு மாநாடு தொடர்பாக பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் ஏற்பட்ட கவரேஜ் தொடர்பாக ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். பல்வேறு வழிகள் மூலம் கோடிக்கணக்கான நபர்கள் வரை இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்தது.

இந்த சுற்றுப் பயணத்தின்போது ஒரு பள்ளிவாயிலை திறந்து வைப்பதற்கான நல்வாய்ப்பும் கிடைத்தது. அல்லாஹ்வின் அருளால் இதனால் நல்ல தாக்கமும் விருந்தினர்களிடம் ஏற்பட்டது. அவர்கள் பகிரங்கமாக இஸ்லாம் ஜெர்மனியில் பரவ வேண்டும் என்று கூறினர். இந்த நிகழ்ச்சியும் நன்றாக கவரேஜ் செய்யப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**1 செப்டம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 –ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **1 –ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

அல்லாஹ் தனது அருளால் M.T.A –வின் மூலமாக அஹ்மதிய்யத்தின் உலகை எவ்வாறு ஒன்று சேர்த்து அவர்களுக்கு செய்திகளைத் தெரிவிக்கின்றான் என்றால், இப்போது காலத்தின் கலீஃபாவின் சுற்றுப்பயணங்கள் தொடர்பாகவும், ஜமாஅத் நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் தொடர்பாகவும் கேட்பதற்கு அவர்களுக்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதில்லை. செய்திகளை அறிந்து கொள்ள ஜமாஅத் பத்திரிகைகளுக்காக அவர்கள் காத்திருக்க வேண்டியதில்லை. மாறாக, உடனுக்குடன் செய்திகள் அவர்களைச் சென்றடைகின்றது. ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சொல்வ –தென்றால், மாநாட்டின் நிகழ்ச்சிகள் மற்றும் அதன் சுற்றுச்சூழல் தொடர்பாக கேட்பவர்கள் தரப்பிலிருந்து சில நேரங்களில் உடனடியாக அவர்களது கருத்துக்களும், உணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்துவதும் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும்போதே நமக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறிப்பினும், எந்நிலையிலும் கடந்த சில நாட்களுக்கு முன்னால் எல்லாரும் அறிந்திருந்தது போன்று ஜெர்மனியின் ஆண்டு மாநாடு நடைபெற்றது. அது தொடர்பாகவும் மக்கள் எனக்கு எழுதினர். பெரும்பாலும் பல்வேறு இடங்கள் மற்றும் நாடுகளின் நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் மக்கள் எனக்கு எழுதிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக எங்கு நான் செல்கின்றேனோ அங்குள்ள நிகழ்ச்சிகள் தொடர்பாக மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். பல்வேறு வகையிலான உணர்வுகளை மக்கள் வெளிப்படுத்துகின்றனர். மேலும் இதற்காக மனிதன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றான். அவனைப் புகழ்கின்றான். அல்லாஹ் இந்த அருளை வழங்கி எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தை ஒன்று சேர்த்துள்ளான் என்றால், ஒரே சரடில் அவர்கள் கோர்க்கப்பட்டிருப்பதன் வெளிப்படையான காட்சியைக் காண்பதற்கான அழகான ஏற்பாட்டையும் அவன் செய்துள்ளான். இதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதுடன் M.T.A பணியாளர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். அவர்களில் தன்னார்வத் தொண்டர்களும் அடங்குவர். முழு நேரமும் தொண்டு செய்பவர்களும் அடங்குவர். அவர்களுக்கும் நாம் நன்றி செலுத்த வேண்டும்.

இம்மக்கள் கேமராவிற்குப் பின்னால் இருக்கின்றனர் அல்லது Transmission –ல் அமர்ந்துள்ளனர் அல்லது மற்ற பணிகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். பணியாளர்கள் பலரும் ஒரு நிகழ்ச்சியை தயார் செய்வதற்காகவும், அனுப்புவதற்காகவும் பணி செய்கின்றனர். அவர்களில் ஸ்டுடியோவில் அமர்ந்திருப்பவர்கள் நமக்கு தெரிகின்றனர். இவர்களைத் தவிர சில பணியாளர்கள், நான் சுற்றுப் பயணங்களில் செல்லும்போது இங்கிருந்து என்னுடன் வருகின்றனர். தங்களது பணி நிமித்தமாக தேவைப்படும் பொருள்களை Uplink –ற்கு தேவையான உபகரணங்களை உடன் எடுத்து வருகின்றனர். பிறகு எந்த நாடுகளில் நிகழ்ச்சிகள் நடக்கின்றதோ அந்த நாட்டிலுள்ள தன்னார்வத் தொண்டர்களும் அதில் கலந்து கொள்கின்றனர். ஜெர்மனியிலும் கூட இந்த தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் நிரந்தரமாக பணியாற்றுகின்றவர்களின் ஒரு குழு இருக்கின்றது. அவர்கள் உள்ளத்தை ஈர்க்கக் கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயார் செய்து காட்டுகின்றனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக. அல்லாஹ் M.T.A -வில் பணியாற்றுபவர்கள் மீது அருள் புரிவானாக என்றே மக்கள் தமது கடிதங்களில் எழுதுகின்றனர். மேலும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

இவ்வாறே பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் ஆண்டு மாநாட்டில் தன்னார்வத்துடன் தொண்டு புரிகின்றனர். இவர்கள் விருந்தினர்களுக்கு இரவு பகல் என்றும் பாராமல் தொண்டு புரிகின்றனர். இப்போது பெரிய நாடுகளில் இவர்களது எண்ணிக்கையும் ஆயிரக்கணக்காக ஆகி விட்டது. இவர்களில் ஆண்களும் உள்ளனர்; பெண்களும் உள்ளனர்; இளைஞர்களும் உள்ளனர்; இளம்பெண்களும் உள்ளனர்; சிறுவர் மற்றும் சிறுமியர்களும் உள்ளனர். இவர்கள் எத்தகைய ஓர் ஆன்மாவுடன் பணி செய்கின்றனர் என்றால் இதனை இக்காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மட்டுமே பார்க்க முடிகின்றது. இதன் காட்சியை சில வாரங்களுக்கு முன்னால் இங்கு யு.கே –வின் ஆண்டு மாநாட்டிலும் நாம் பார்த்தோம். அதே காட்சியை இப்போது ஜெர்மன் ஆண்டு மாநாட்டிலும் நாம் பார்த்தோம்.

எனவே, மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் இந்த தன்னார்வத் தொண்டர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்று நான் எப்போதும் கூறி வருகின்றேன். இவர்கள் ஓர் உணர்வுடன் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக சுயநலமின்றி பணி செய்கின்றனர். இந்த பணியாளர்களில் இந்த செயல் அஹ்மதியல்லாத விருந்தினர்களுக்கு அல்லது முஸ்லிம் அல்லாத விருந்தினர்களுக்கு அமைதியான தப்லீகிற்கான வழியாகின்றது. M.T.A -வில் காட்டப்படுகின்ற மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பாக மக்கள் தமது கருத்துக்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். இந்நிகழ்ச்சிகளிலிருந்து அவர்கள் பலனும் பெறுகின்றனர். அதில் இன்பமடைகின்றனர். ஆனால், மாநாட்டிற்கு வந்திருந்த அந்நியர்களின் தாக்கங்கள், உணர்வுகள், பணியாளர்களின் தொண்டு தொடர்பாக அவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியது ஆகியவற்றை ஆண்டு மாநாடு நடக்கின்ற சமயத்திலும் காட்டவில்லை. அது பற்றி கூறப்படுவதும் இல்லை. எந்நிலையிலும் இது பற்றி எவரும் தெரிந்து கொள்ள முடியாது. இந்த பணியாளர்கள் தங்களது டியூட்டியைச் செய்வதுடன் அமைதியான ஒரு முபல்லிக் ஆகவும் இவர்கள் செயல்படுகின்றனர். இது பற்றிய செய்தியை M.T.A –வின் Screen –ம் காட்டுவதில்லை. நிகழ்ச்சிளைத் தொகுத்து வழங்குபவர்களும் கூட இதற்குரிய உரிமையைச் செலுத்த முடியாது.

இவ்வாறே மாநாட்டில் கலந்து கொள்பவர்களும் தங்களது நடைமுறை மூலமாக விருந்தினர்கள் மீது ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இதைப் பற்றி மாநாட்டிற்குப் பிறகே விருந்தினர்கள் எடுத்துக் கூறுகின்றனர். எனவே, ஆண்டு மாநாட்டின் தாக்கங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பான இந்தப் பகுதியும் கூட மக்கள் முன்னால் எடுத்து வைக்கப்பட வேண்டும். எனவேதான் நான் அவற்றை எடுத்துக் கூறுகின்றேன். அதன் மூலம் உலகிலுள்ள அஹ்மதிகளுக்கு மாநாட்டினால் ஏற்படும் தாக்கங்கள், அந்நியர்கள் மீது எவ்வாறு வழக்கத்திற்கு மாற்றமான நல்விளைவுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது என்பது தெரிய வர வேண்டும். இதன் மூலம் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கும் பணியாளர்களுக்கும் இவர்களின் அமைதியான நடைமுறை ஜமாஅத்தைச் சாராத அந்நியர்களை இஸ்லாமிய போதனைகளுக்கு அருகில் கொண்டு வருகின்றது என்பது தெரிய வர வேண்டும்.

இப்போது பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த விருந்தினர்களின் தாக்கங்களை எடுத்துக் கூறுவேன். அதன் மூலம் ஆண்டு மாநாட்டின் அருள்களின் இந்தப் பகுதியும் நம் முன்னால் வர வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வுக்கு இன்னும் நன்றி செலுத்து –வதற்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும். மேலும் அதன் மூலம் நமது நிலைமைகளை இன்னும் சிறப்பாக ஆக்கிக் கொள்வதன் பக்கம் நமது கவனம் இருக்க வேண்டும்.

அரபு தலைமுறையில் வந்த ஒரு முஸ்லிம் நண்பர் காலித் மியாஸ் சாஹிப் அவர்கள் செஞ்சிலுவை அமைப்புடன் சேர்ந்து தொண்டாற்றி வருகின்றார்கள். அவர்கள் இந்த வருடம் ஜெர்மன் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்கள் தமது தாக்காங்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: “நான் எனது முஸ்லிம் அல்லாத நண்பர்கள் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்வதைக் கேட்கும்போது பரஸ்பரம் முஸ்லிம்களுக்கு இடையிலுள்ள வெறுப்பு மற்றும் சண்டைகளின் காரணமாக இஸ்லாத்தை தற்காத்துக் கொள்ள என்னால் முடியவில்லை. இன்று இந்த மாநாட்டில் உங்களது ஜமாஅத்தின் ஒட்டுமொத்தமான மற்றும் தனிப்பட்ட அன்பு, அமைதி, உங்களுக்கிடையிலுள்ள ஒற்றுமை, ஜமாஅத் சகோதரர்களுக்கு கலீஃபாவின் மீதுள்ள அன்பு மற்றும் அவர்களுக்கு கட்டுப்படுகின்ற உணர்வு ஆகியவற்றைப் பார்த்து எனது தலை பெருமையுடன் உயர்ந்து விட்டது. நான் எத்தகைய ஒரு ஜமாஅத்தை எனது கண்களால் கண்டு விட்டேன் என்றால் அதைச் சார்ந்திருப்பவர்கள் அமைதி நிறைந்தவர்களாக இருக்கின்றனர். இவர்கள் ஒன்று சேர்வதில் ஓர் ஒழுங்குமுறை இருக்கின்றது. நான் உங்களைப் பற்றிய உதாரணத்தை மிகவும் நம்பிக்கையுடன் எனது முஸ்லிம் அல்லாத நண்பர்களிடம் எடுத்துக் கூறி இஸ்லாத்தின் மீது அவர்கள் செய்கின்ற ஆட்சேபனைகளை தற்காத்துக் கொள்ள முடியும்” என்று இவர் கூறுகிறார்.

பிறகு மஸாயீல் ஃபிஸ்ஸர் என்ற ஒரு ஜெர்மனிய நண்பர் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: “நான் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னதாக பத்திரிகையில் அஹ்மதிகள் அமைதியை விரும்புகின்ற மக்கள் என்று படித்தேன். ஆனால் அமைதி பற்றிய வாதத்தை வேறு பல மக்களும் கூட செய்கின்றனர் என்று எனது உள்ளத்தில் பட்டது. ஆனால், இங்கு வந்து நான் எனது கண்களால் பார்த்து விட்டேன். அதாவது அமைதி பற்றிய வாதமும் அதற்கேற்ற செயலுக்குமான சாட்சி இந்த மாநாட்டில் மட்டுமே கிடைக்க முடியும். இங்கு சுயமே மக்களும் அன்புடனும் நேசத்துடனும் நேரத்தைக் கழிக்கின்றனர். வருகின்ற ஏனைய மக்களையும் அவர்கள் வரவேற்கின்றனர். இவ்வளவு பெரிய மாநாடு இந்த அளவு அமைதி நிறைந்து காணப்படுவதைப் பார்த்து வியப்பு ஏற்படுகின்றது. அது அல்லாமல் **500** பேர் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்தாலும் கூட சண்டை ஏற்பட்டு விடுகின்றது. நான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு உங்களது அமைதி நிறைந்த இந்த சூழலைக் கண்டு அமைதி தொடர்பான உங்களது வாதம் உண்மையானது என்பதை நான் உண்மைப்படுத்துகின்றேன்” என்றும் அவர் கூறினார்.

பிறகு ஜெர்மனியைச் சார்ந்த ஒரு பெண் மாராலி உகாலா அவர்களுக்கு ஜமாஅத்துடன் நிரந்தரமான தொடர்பு ஏற்பட்டிருக்கின்றது. மாநாட்டின்போது நடைபெற்ற பைஅத் நிகழ்ச்சியையும் அவர்கள் கண்டார்கள். இவர் கூறுகின்றார்கள்: “ஏறக்குறைய ஒன்றன்பின் ஒன்றாக எனது எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைத்து விட்டது. இப்போது அதிக நாட்கள் நான் விருந்தினராக இங்கு வரமாட்டேன் என்று எனக்கு தோன்றுகிறது. மாறாக சுயமே நானும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.”

பிறகு மாரியா ஜோஸே என்ற ஒரு பெண் விருந்தினர். இவருக்கு தென் அமெரிக்காவுடன் அசல் தொடர்பு இருக்கின்றது. பெர்லினில் இவர் மாணவியாக இருக்கின்றார். படிப்பதற்காக இங்கு வந்திருக்கின்றார். இவர் தமக்கு ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்:

“இதற்கு முன்னதாக இஸ்லாம் அல்லது அஹ்மதிய்யத் தொடர்பாக எனக்கு எந்த

அறிமுகமும் ஏற்படவில்லை. Peragoyu –விலுள்ள ஜமாஅத்தின் முரப்பியின் மனைவி மூலமாக எனக்கு ஜமாஅத் பற்றி தெரிய வந்தது. மேலும் ஜெர்மனியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு நடைபெறுவது பற்றி எனக்கு தெரிய வந்தது. நான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்தேன். இங்கு வந்து நான் மிகவும் வியப்படைந்தேன். இவ்வளவு சமுதாயங்களும், பல்வேறு இனம் மற்றும் நிறங்களை உடைய மக்களும் எந்த அளவு ஒற்றுமையுடன் இருக்கின்றனர் என்றால் எல்லா பக்கமும் அமைதி மற்றும் நிம்மதியின் சூழல் நிலவுகின்றது. மக்கள் நிம்மதியாக இருக்கின்றனர். எவருக்கும் எந்த விதத்திலும் அச்சம் இல்லை. எனக்கு இத்தகைய அமைதி நிறைந்த மாநாட்டில் கலந்து கொள்வது என்பது ஒரு புதிய அனுபவமாகும். பெர்லின் திரும்பிச் சென்ற பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாயிலுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பமாகும். இந்த ஜமாஅத்துடன் உள்ள எனது தொடர்பை மேலும் நான் வலுப்படுத்த வேண்டும். உங்களுடன் சேர்ந்து இருந்ததில் எனது உள்ளத்திற்கு நிம்மதி கிடைத்திருக்கின்றது.''

பிறகு மெஸிடோனியாவில் ஒரு சமூக நல அமைப்பில் பணிபுரிகின்ற மூன்று பெண்கள் ஜெர்மனி வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் கூறுகின்றார்: ''எங்களது அக்கம் பக்கத்தில் மெஸிடோனியாவில் அதிகமாக முஸ்லிம்கள் இருக்கின்றனர். ஆனால், இஸ்லாத்தின் இவ்வகையைச் சார்ந்த மக்கள் ஒரு சமுதாய அமைப்பில் இருப்பதைப் பார்த்தது நாங்கள் முற்றிலும் எதிர்பார்க்காத ஒன்றாக இருந்தது. நாங்கள் உங்களது ஜமாஅத் சகோதரர்களையும் மற்றும் உங்களது போதனைகளையும் உங்களது தலைமையையும் பார்த்தோம். நாங்கள் அங்குள்ள முஸ்லிம்களுக்கு உங்களது ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்ற இந்த உணர்வோடு நாங்கள் திரும்பிச் செல்வோம்.''

இவர் கூறுகின்றார்: ''இந்த ஜமாஅத்தும் இந்த மாநாடும் ஏனைய முஸ்லிம்களுக்கு ஒரு முன்மாதிரியாகும். அத்தகைய அமைதி நிறைந்த போதனைகளும் அத்தகைய கட்டுக்கோப்புடன் இருக்கின்ற ஜமாஅத்தும் சர்வதேச அளவில் முஸ்லிம்களுக்கு பிரநிதியாக இருப்பதற்கு தகுதி உடையதாகும். இந்த முறை ஒருவரது அழைப்பின் பேரில் இங்கு நாங்கள் வந்தோம். வருங்காலத்தில் நாங்கள் விருந்தினர்களை எங்களுடன் அழைத்து வருவோம் என்று நாங்கள் நம்புகின்றோம். மெஸிடோனியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு நாங்களே உங்களது ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைப்போம்.''

இவ்வாறு அல்லாஹ் தப்லீகின் வழிகளைத் திறந்து தருகின்றான். Latvia –விலிருந்து மைக்கோலாஸ் என்ற கிறித்தவ நண்பர் வந்திருந்தார். மதங்களை ஆராய்வதில் ஆர்வமுடையவராக அவர் இருக்கின்றார். இவர் கூறுகின்றார்: ''மதங்களை ஆராய்வதில் எனக்கு ஆழமான ஆர்வம் இருக்கின்றது. இதன் காரணமாகவே உங்களது ஜமாஅத்தின் போதனைகளைப் பார்க்கின்றேன். எனக்கு உங்களது போதனைகளும் உங்களது செயல்முறையும் நேர்மறையான அம்சங்களைக் கொண்டதாகவும் ஈர்க்கின்ற தன்மை உடையதாகவும் தோன்றுகிறது. நான் மாநாட்டில் கலந்து கொண்ட மக்களிடம் ஆன்மீக ஆர்வம் இருந்ததை உணர்ந்தேன்.'' எப்போதும் மாநாட்டில் கலந்து கொள்கின்ற அஹ்மதிகளின் பணி என்னவென்றால், இந்த மக்கள் உணர்கின்ற ஆன்மீக ஆர்வம் மாநாட்டின் நாட்களில் மட்டும் இருக்கக் கூடாது. தற்காலிகமான உணர்வாக அது இருக்கக் கூடாது. மாறாக, நிரந்தரமாக நம்மிடம் இருக்கின்ற ஆர்வமாக அது இருக்க வேண்டும்.

Latvia –விலிருந்து வந்திருந்த பத்திரிகை –யாளரான அகஸ்டின் என்ற ஒரு பெண்மணி இவ்வாறு எழுதுகின்றார்: ''நான் கடந்த ஆறு மாதங்களாக இஸ்லாத்தின் பல்வேறு பிரிவுகள் தொடர்பான ஒரு Project –ல் பணிபுரிந்து வருகின்றேன். இந்த பணி தொடர்பாக நான் இஸ்தம்போலுக்கும் சென்றிருந்தேன். அங்கு பல்வேறு முஸ்லிம் பிரிவுகளைச் சார்ந்தவர்களை நான் சந்தித்தேன். ஆனால், இங்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமைப் பார்த்து எனது உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகளை எடுத்துச் சொல்வதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. நான் அவர்களைச் சந்தித்தபோது அவர்களிடம் இந்த சமயத்தில் முல்லாயிஸம் மற்றும் தீவிரவாதத்திற்கான சிகிச்சை என்ன இருக்கின்றது? என்று கேட்டேன். அவர்கள் இரண்டு சொற்களில் இந்த கடினமான கேள்விக்கான முழுமையான பதிலை எனக்கு கூறி விட்டார்கள். இந்த பிரச்சனைக்குரிய ஒரே தீர்வு சரியான போதனையையும் தர்பிய்யத்தும் வழங்கப்பட வேண்டும். இஸ்லாத்தின் சரியான போதனைகளை எடுத்துக் கூற வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.'' உண்மையின் சரியான போதனைகளை வழங்குவதுதான் இந்த பிரச்சனைகளுக்கான சரியான தீர்வாக இருக்க முடியும். இந்த சரியான போதனைகளைப் பற்றிய அறிவை இந்தக் காலத்தில் நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியார்தான் வழங்கியுள்ளார்கள். எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் அந்நியர்களின் இந்த தாக்கங்களைப் பற்றி கேட்டு பெருமை மட்டும் கொள்வது போதுமானதல்ல. மாறாக, நாம் எல்லா சமயத்திலும் நமது செயலளவிலான சிறந்த நிலைமைக்காக முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும்.

Latvia –விலிருந்து Kurtba பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் Lolly Diaz என்ற பெண்மணி ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு தனக்கு ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்: ''நான் எனது வாழ்நாளில் முதன் முறையாக முஸ்லிம்களின் இவ்வளவு பெரிய மாநாட்டில் கலந்து கொண்டேன். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களை முதன் முறையாக அருகில் பார்த்தபோது அது எனக்கு ஒரு வியப்பான அனுபவமாக இருந்தது. அந்த நிலை எனக்கு வாழ்நாள் முழுவதும் நினைவில் இருக்கும். எனது உணர்வுகளை வெளிப்படுத்த எனது சொற்கள் எனக்கு துணை நிற்கவில்லை. இந்த ஜமாஅத்தும் இந்த ஜமாஅத்தின் கலீஃபா அவர்களும் ஏனைய முஸ்லிம்களை விட முற்றிலும் மாறுபட்டவர்கள் ஆவர் என்பது எனது உறுதியான நம்பிக்கை ஆகும். இதனை எனது ஆன்மாவில் நான் உணர்கின்றேன்.'' மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வோர் அஹ்மதியும் இவரிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இந்த வருடம் போஸ்னியாவில் இருந்து 40 நபர்களைக் கொண்ட ஒரு குழு ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டனர். இவர்களில் 18 பேர் அஹ்மதிகளாவர். ஏறக்குறைய தப்லீகின் கீழிலிருந்த 28 பேர் வந்திருந்தனர்.

ஒரு N.G.O –வின் தலைவியாக இருக்கின்ற விருந்தினரான யாஸ்மின் சாஹிபா அவர்களுக்கு சிறிது காலத்திற்கு முன்பு ஜமாஅத் பற்றிய அறிமுகம் கிடைத்தது. இவர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுயமே 1200 கிலோ மீட்டர் காரில் பயணம் செய்து வந்துள்ளார். இவர் கூறுகின்றார்: ''மாநாட்டின் இவ்வளவு பெரிய ஏற்பாட்டைப் பார்த்து இவர்கள் எப்படிப்பட்ட மக்கள் என்று எனக்கு வியப்பு ஏற்பட்டது. மாநாட்டின் ஏற்பாடுகளில் எனக்கு எந்த குறையும் தென்படவில்லை.'' இது, பணியாளர்கள் செய்த தொண்டின் தாக்கமாகும். அது அந்நியர்களை தாக்கத்திற்கு ஆளாக்காமல் இருக்க முடியாது.

போஸ்னியாவைச் சார்ந்த Roman Community -ன் புகழ்பெற்ற அரசியல்வாதியான நஜாத் சாஹிப் அவர்கள் அங்கு அனைவராலும் அறிஞராக அறியப்படுவர் ஆவார். Tuzla நகரத்தின் கவுன்சிலராகவும் இவர் இருக்கின்றார். இவர் கூறுகின்றார். ''மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளும் மிகவும் சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தது. நான் இதற்கு முன்னர் ஒருபோதும் இதுபோன்ற நிகழ்ச்சியில் பங்கு பெற்றதில்லை. இந்த மாநாடு பல்வேறு கோணங்களில் எனக்கு படிப்பிணையைத் தரக் கூடியதாக இருக்கின்றது. பணியாளர்களின் கலப்பற்ற தன்மையைப் பார்த்து மக்கள் தமது

## திருக்குர்ஆனிலிருந்து...

*(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

ஈமானில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர் என்பதை நான் புரிந்து கொண்டேன். மேலும் இவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் ஒற்றுமை காணப்படுகின்றது. இந்த ஒற்றுமையில்தான் இவர்களின் முன்னேற்றத்தின் இரகசியம் இருக்கின்றது. இந்த மக்களிடம் இத்தகைய நிலைமை உருவாகுவதற்கு காரணம் கிலாஃபத்துடன் அவர்களுக்கு உள்ள தொடர்பாகும்.'' மாநாட்டில் மக்கள் கலந்து கொள்ளும்போது அவர்களது மூளையில் கிலாஃபத் தொடர்பாக இருக்கின்ற தவறான தாக்கமும் அது தொடர்பாக நிலவும் அச்சமும் அகன்று விடுகின்றது. எனவே ஒவ்வோர் அஹ்மதியும் ஒவ்வொரு பணியாளரும் இந்த தாக்கங்களை எப்போதும் நிலைத்திருக்கும்படி செய்ய வேண்டும். அதைப் பாதுகாக்கவும் வேண்டும்.

ஜமாஅத் அல்லாத ஒரு நண்பர் மாஹர் சாஹிப் தனது மனைவியுடன் தனது சொந்த செலவில் மாநாட்டிற்கு வந்து கலந்து கொண்டார். இவர் கூறுகின்றார்: ''இங்கு விருந்தினர்கள் எவ்வாறு கருத்தில் கொள்ளப்படுகின்றனர் என்றால், எந்த அளவு அன்புடன் மக்கள் நடந்து கொள்கின்றனர் என்றால், நான் உண்மையிலேயே இதைக் கூறிக் கொள்கின்றேன். அதாவது இம்மக்கள் எங்களை தரையில் படுக்கும்படி கூறினாலும், உண்பதற்கு காய்ந்து போன ரொட்டிகளை மட்டும் கொடுத்தாலும் எங்களுக்கு அவர்கள் தொடர்பாக எந்த புகாரும் இருக்காது. எந்த அன்பும் நேசமும் இங்கிருந்து எங்களுக்கு கிடைத்திருக்கின்றதோ அதற்கு இணையாக உலகில் வேறு எதுவுமில்லை.''

போஸ்னியாவிலிருந்து ஒரு விருந்தினர் தியானா சாஹிபா மாநாட்டில் கலந்து கொண்டார். இவர் நர்ஸ் ஆக இருக்கின்றார். ஜமாஅத்துடன் இவருக்கு தொடர்பு இருக்கின்றது. தனது கணவர் மற்றும் மகனுடன் போஸ்னியாவில் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் இவர் கலந்து கொண்டிருக்–கின்றார். நல்ல முயையில் ஒத்துழைப்பும் தந்து வருகின்றார். இவர் தனது கணவருடனும் பெற்றோர்களுடனும் பயணத்திற்கான செலவை தானே ஏற்றுக் கொண்டு இங்கு வந்துள்ளார். ''மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளும் மிகவும் சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தன. இந்த மக்கள் நமக்காக இந்த அளவு சிரமங்களைச் சகித்துக் கொள்கின்றனரே என்று சுயமே எங்களுக்கு வெட்கம் ஏற்பட்டது'' என்று இவர் கூறுகின்றார்.

பிறகு மாநாட்டில் கலந்து கொண்ட ஒரு விருந்தினரான அமீர் சாஹிப் முதன் முறையாக மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டின் சூழல் இவர் மீது நேர்மறையான தாக்கத்தை அதிகமாக ஏற்படுத்தி இருக்கின்றது. இவர் கூறுகின்றார்: ''நான் திரும்பிச் சென்று இந்த தூதுச் செய்தியைத்தான் வழங்க வேண்டியது இருக்கின்றது. அதாவது இந்த மாநாட்டைப் பார்த்த பிறகு எனது உள்ளத்தின நிலைமையை எடுத்துக் கூற முடியாது. இவ்விஷயங்களை உணர மட்டுமே முடியும். எனவே, ஒவ்வொருவரும் சுவர்க்கமயமான இந்த சமூகத்தில் வந்து சில நாட்களைக் கழிக்க வேண்டும். அதன் மூலம் அவர்களுக்கு உண்மையான சுவர்க்கத்தைப் பற்றிய உறுதி ஏற்படும்.'' பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடியவர்களும் தமக்கிடையில் காழ்ப்புணர்வும் பகைமையும் கொண்டவர்களும் இம்மக்களின் இந்த விமர்சனங்களைக் கேட்ட பிறகு அவர்களுக்கு வெட்கம் வர வேண்டும். எப்போதும் அவர்களில் ஒருவர் மற்றவருடன் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த வருடம் பல்கேரியாவிலிருந்து 52 பேர்களைக் கொண்ட ஒரு குழு ஜெர்மன் மாநாட்டில் கலந்து கொண்டனர். இவர்கள் 20 பேர் அஹ்மதிகளாவர். 32 பேர் அஹ்மதி அல்லாத விருந்தினர்கள் ஆவர். பேரூந்தின மூலமாக 30 மணி நேரம் பயணம் செய்து இவர்கள் ஜெர்மனிக்கு வந்துள்ளனர். இந்த சூழலில் தொழிலதிபர்களும் இருந்தனர்; வழக்கறிஞர்களும் இருந்தனர்; பேராசிரியர்களும் இருந்தனர்; மாணவர்களும் இருந்தனர்; வாழ்வின் பொதுவான பல்வேறு துறைகளுடன் தொடர்புள்ளவர்களும் இருந்தனர்.

அஸினோவிட் என்ற ஒரு பெண் கூறுகின்றார்: ''நான் முதன் முறையாக மாநாட்டில் கலந்து கொண்டேன். பல்கேரியாவிலுள்ள அஹ்மதிகளிடமிருந்து மாநாடு பற்றிய பல விஷயங்களைக் கேட்டிருக்கின்றேன். அங்கு பல சமுதாயங்களைச் சார்ந்த மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடியிருந்தனர். ஒவ்வொருவரும் மற்றவருடன் கண்ணியத்துடனும் அன்புடனும் சந்தித்தனர். மனிதன் தனது வாழ்க்கையை மாற்ற விரும்பினால் இந்த மாநாட்டிற்கு வர வேண்டும். நான் இங்கிருந்து பல விஷயங்களையும் கற்றுக் கொண்டேன். இரண்டு விஷயங்களைப் பற்றி கண்டிப்பாக குறிப்பிட விரும்புகின்றேன். ஒன்று இங்கு அல்லாஹ் மீது அன்பு கொள்வதற்கு கற்றுக் கொடுக்கப்படுகின்றது. மற்றொன்று மக்களின் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வது பற்றி இங்கு கற்றுத் தரப்படுகின்றது.

பல்கேரியாவில் ஜமாஅத் ரிஜிஸ்டர் செய்யப்படுவது ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. அஹ்மதி அல்லாத ஆலிம்கள் தரப்பிலிருந்து அங்கு எதிர்ப்பு அதன் உச்சத்தை அடைந்திருக்கின்றது. அதன் காரணமாக அரசாங்கமும் அவர்களின் தாக்கத்தின் கீழ் இருந்து வருகின்றது. எனவே, பல்கேரியா ஜமாஅத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அங்குள்ள நிலைமையைச் சரி செய்வானாக. அங்கு மீண்டும் ஜமாஅத் ரிஜிட்ரேசன் செய்யப்பட்டு அங்கு ஜமாஅத் பகிரங்கமாக தப்லீக் செய்வதற்கும் ஜமாஅத்தின் செயல்பாடுகள் நல்ல முறையில் நடப்பதற்கும் அல்லாஹ் மீண்டும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

பல்கேரியா குழுவைச் சார்ந்த ஒரு விருந்தினர் Pyilco Anew அவர்கள் கூறுகின்றார்கள்: ''நான் முதன் முறையாக இத்தகைய அருளுக்குரிய மாநாட்டில் கலந்து கொண்டேன். எனது அனுபவத்தைச் சொற்களில் கூறுவது கடினமான விஷயமாகும். அஹ்மதிகள்

## திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)*

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.



93600 05888
78716 00664

**IBR**

Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.


## திருக்குர்ஆனிலிருந்து...

*(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)*

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)*

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மனிதன் நல்லதைக் கேட்பவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)

**S.H. வஸீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

மட்டுமே உண்மையில் அமைதியைக் கற்றுத் தருபவர்கள் ஆவர் என்பதை இங்கிருந்துதான் நான் கற்றுக் கொண்டேன். அவர்கள்தான் பிறருக்கு கண்ணியமளிக்கின்றனர். உலகை சுவர்க்கமாக ஆக்க விரும்புகின்றனர். இங்கு உண்மையிலேயே வாழ்க்கையின் ஒளி கிடைக்கின்றது. எத்தகைய ஒளி என்றால் அது மனிதனுக்கு வாழ்வை வழங்குகின்றது. நான் எனது முழு வாழ்க்கையில் எல்லா மக்களுக்கும் இதைத்தான் கூறுவேன். அதாவது அஹ்மதிய்யத்தே உண்மை இஸ்லாம் ஆகும். அவர்கள்தான் உலகில் அமைதியை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். நான் உங்களிடம் துஆவிற்காக வேண்டுகின்றேன்.''

இந்த குழுவைச் சார்ந்த Deemorof என்ற விருந்தினர் கூறுகின்றார்: ''என்னைப் பற்றி உங்களது சொற்பொழிவு என்னை மிகுந்த தாக்கத்திற்கு ஆளாக்கியது. அதில் மனிதர்கள் மீது அன்பு கொள்வது பற்றி கூறப்பட்டிருந்தது'' என்று இவர் கூறுகின்றார்.

இவர் கூறுகின்றார்: ''சிறுவர்கள் குடிப்பதற்கு தண்ணீர் கொடுத்தபோது மிகவும் அன்புடன் எங்களுடன் பேசினர். அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எந்த சமுதாயத்தின் சிறுவர்கள் இவ்வாறு இருக்கின்றனரோ அந்த சமுதாயத்தின் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும்.''

மனோதத்துவ பேராசிரியையான ஒரு கிறித்தவ பெண்ணான Desislaya அவர்கள் கூறுகின்றார்: ''நான் முதன் முறையாக மாநாட்டில் கலந்து கொண்டேன். இந்த மாநாடு ஒரு அற்புதமாகும். அங்கு அன்பு, நேசம் மற்றும் கண்ணியம் கிடைக்கின்றது. நான் எந்த சண்டையையும் அங்கு பார்க்கவில்லை. ஒவ்வொருவரும் மற்றவருக்கு தொண்டு செய்து கொண்டிருந்தனர். புன்னகை பூத்த முகத்துடன் ஒருவர் மற்றவரைச் சந்தித்து வந்தனர். நான் பத்திய உணவு உண்டு வந்தேன். ஆயிரக்கணக்கான மக்களுக்கு மத்தியில் எனக்கு மட்டும் பத்திய உணவு தரப்பட்டது. நான் நோய்வாய்ப்பட்டபோது உடனடியாக எனக்கு மருந்து தரப்பட்டது. எவருமே VIP ஆக அங்கு இருக்கவில்லை. எல்லாரும் சமமாகக் கருதப்பட்டனர். ஜுமுஆ குத்பா என்னை தாக்கத்திற்கு ஆளாக்கியது. மனிதர்களிடம் அன்பு கொள்வது, குறைகளைத் திரையிட்டு மறைப்பது, ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வது, ஒருவரது தவறுகளைப் பற்றி மற்றவர்களுக்கு முன்னால் கூறாமல் இருப்பது, அவருக்காக துஆ செய்வது ஆகிய போதனைகளை நீங்கள் எடுத்துக் கூறினீர்கள். அந்தோ! இன்று முழு உலகமும் உங்களது குரலைக் கேட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!! என்று நான் சிந்தித்துக் கொண்டே இருந்தேன். உலகம் நேரான வழியில் வர விரும்பினால் அது உங்களது குரலைக் கேட்க வேண்டும். நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

கினிபஸாவுடன் தொடர்புடைய ஓர் இளைஞரான அபூபக்கர் சாஹிப் அவர்கள் புர்துகாலில் Public Security –யில் Master படித்துக் கொண்டிருக்கின்றார். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கின்றார். இவர் கூறுகின்றார்: ''மாநாட்டின்போது நான் பார்த்த பாதகாப்பு ஏற்பாடுகள் உண்மையிலேயே தனிச்சிறப்பு மிக்கதாக இருந்தது. நாற்பதாயிரம் நபர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தைப் பாதுகாப்பது என்பது மிகவும் அசாதாரணமான விஷயமாகும். இவ்வளவு பெரிய கூட்டத்தைப் பாதுகாப்பது ஒரு மாநிலத்திற்குக் கூட மிகவும் கடினமான ஒரு விஷயமாகும். அத்தகைய தருணங்களில் ஏதாவது சண்டை சச்சரவுகள் மற்றும் குழப்பம் ஏற்பட்டு விடும். ஆனால் எனக்கு மாநாடு நடந்து கொண்டிருந்த சமயத்தில் எந்தவொரு போலீஸும் எனக்கு தென்படவில்லை. அவ்வாறிருந்தும் கூட எவரும் மற்றவருடன் சண்டை போடுவதை என்னால் பார்க்க முடியவில்லை. மாறாக, எல்லா மக்களும் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் உணர்வுகளில் திளைத்திருந்ததைப் பார்க்க முடிந்தது. இந்த விஷயம் எனது உள்ளத்தில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.''

மெஸிடோனியாவிலிருந்து 65 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர். இவர்களில் ஒரு பெரும் எண்ணிக்கையில் மக்கள் மெஸிடோனியாவிலிருந்து ஜெர்மன் வரை ஏறக்குறைய 2000 கிலோ மீட்டர் பயணம் செய்து பேரூந்தின் மூலம் 42 மணி நேரம் பயணம் செய்து ஜெர்மன் வந்து சேர்ந்தனர். இவர்களில் நான்கு பல்வேறு டி.வி சேனல்களைச் சார்ந்த ஐந்து பத்திரிகையாளர்கள் இருந்தனர். மூன்று பல்வேறு உள்ளூர் தொலைக்காட்சியின் மூன்று பிரதிநிதிகள் இருந்தனர். ஒரு தேசிய தொலைக்காட்சியின் நிருபர் இருந்தார். பத்திரியாளர்கள் மாநாட்டின் போது பதிவுகளையும் செய்தனர். பல்வேறு மக்களிடம் அவர்கள் நேர்காணல் நிகழ்ச்சிகளை நடத்தினர். இவர்களது சந்திப்பு என்னுடன் 28 ஆம் தேதி இருந்தது. நாங்கள் செய்த பதிவுகள் மற்றும் சந்திப்பு தொடர்பான குறும்படத்தை நாங்கள் காட்டுவோம் என்று இவர்கள் கூறினர். இவர்களில் 32 கிறித்தவ நண்பர்கள் இருந்தனர். 23 அஹ்மதிகளும் அஹ்மதி அல்லாத 10 நண்பர்களும் இருந்தனர். இவர்களில் ஒருவர் கடைசி நாளன்று பைஅத்தும் செய்திருந்தார்.

மெஸிடோனியாவிலிருந்து பெராவோ என்ற நகரிலிருந்து வந்திருந்த விருந்தினர் ஒருவர் வழக்கறிஞர் ஆவார். இவர் கூறுகின்றார்: ''நான் முதன் முறையாக இந்த மாநாட்டில் கலந்து கொண்டேன். எல்லா ஏற்பாடுகளும் சிறப்பான இருந்தன. எந்தக் குறையும் இருக்கவில்லை. மூன்றாம் நாளன்று நீங்கள் நிகழ்த்திய சொற்பொழிவு என்னிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த சொற்பொழிவின் மூலம் இஸ்லாத்தின் அசல் நோக்கம் அமைதியை ஏற்படுத்துவதாகும்; போர் புரிவதல்ல என்பது எனக்கு புரிந்தது. இஸ்லாம் மனிதர்களுக்கு வாழ்வின் அடிப்படை விஷயங்களையும் முக்கியமான விஷயங்களையும் கற்றுத் தருகின்றது. எவ்வாறு ஆரோக்கியமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதைப் பற்றி அது கற்றுத் தருகின்றது. இஸ்லாம் எல்லா நிலையிலும் நன்மை வெற்றி பெற வேண்டும். தீமை தோற்க வேண்டும் என்பதைக் கற்றத் தருகின்றது. இந்த போதனைகளுக்கேற்ப நாம் செயல்பட்டால் உலகம் போர் இல்லாமல் அமைதி மற்றும் அன்பின் கூடாரமாக ஆகி விடும்.''

பிறகு இவர் கூறுகின்றார்: ''பெண்களின் உரிமைகள் தொடர்பாக நீங்கள் கூறியவை மிகவும் நல்ல போதனைகளாகும் என்று நான் புரிந்து கொண்டேன். குழந்தைகளின் கல்வி மற்றும் தர்பிய்யத் தொடர்பான விவகாரங்களுக்கு பெண் பொறுப்பாளியாக இருக்கின்றார். இதில் அவளுக்கு முக்கிய பங்கு இருக்கின்றது.'' இவர் தனது சொற்களில் இந்த சொற்பொழிவு பற்றி பெண்களின் உரிமைகள் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்: ''சுருக்கமாகக் கூறுவதென்றால் உங்களது சொற்பொழிவில் நீங்கள் கூறியது இதுதான் என்று நான் கூறுவேன். அதாவது, பெண் கூட்டைக் கவனித்துக் கொள்பவளாக இருக்கின்றார். கணவன் அந்த கூட்டைப் பாதுகாப்பவராக இருக்கின்றார். கணவன் குடும்பத்தின் தலையாக இருக்கின்றார். பெண் கழுத்தாக இருக்கின்றார். அவர்களில் ஒருவர் மற்றவரைச் சார்ந்து நிற்காமல் நிலைத்து நிற்க முடியாது என்று நான் கருதுகின்றேன்.''

பிறகு கூறுகின்றார்: ''பைஅத் நிகழ்ச்சியும் என் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. நேரம் குறைந்து விட்டது போன்று தோன்றியது. எல்லா பக்கமும் மக்கள் இருந்தனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா
ஆதம்பாக்கம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

M.Y. கன்சுல் ஆயிஷா
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

அவர்கள் இந்த நொடிகளிலிருந்து தங்களை விலக்கி வைத்துக் கொள்ள விரும்பவில்லை. எல்லா வழிகளும் ஒரே திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அந்த திசையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இருந்தார்கள். அந்த நேரத்தில் மாநாட்டுத் திடலுக்கு வெளியிலுள்ள பகுதி பாலைவனம் போன்று காட்சியளித்தது. எவருமே வெளியில் இருக்கவில்லை.''

ஜெர்மனியிலுள்ளவர்கள் இந்த விஷயத்தில் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. இது பற்றி சில புகார்களும் எனக்கு வந்திருக்கின்றன. அல்லாஹ் குறைகளைத் திரையிட்டு மறைத்திருக்கின்றான். ஆனால் தர்பிய்யத் துறை இந்த விஷயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது வருங்காலத்தில் உண்மையிலேயே அது பாலைவனமாக தென்பட வேண்டும். ஏனென்றால் எத்தகைய புகார்கள் என்னிடம் வந்துள்ளன என்றால் மக்கள் மாநாடு நடந்து கொண்டிருந்த சமயத்தில் வெளியில் உலாவிக் கொண்டிருந்தனர். M.T.A –விலுள்ளவர்களும் அவர்களை காட்டிக் கொண்டிருந்தனர். உண்மை நிலையை அவர்கள் காட்டியது நல்ல விஷயம்தான். ஆனால், மாநாட்டு நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும் போது மாநாட்டின் பக்கம் அதிகம் Focus இருக்க வேண்டும். M.T.A –வின் காரணமாக பல மக்களுக்கும் என்ன குறை இருக்கிறது என்பது தெரிய வந்து விட்டது.

இவர் கூறுகின்றார்: ''மாநாட்டு சமயங்களில் நான் இஸ்லாம் தொடர்பான எனது அறிவை மேலும் விரிவானதாக ஆக்கிக் கொண்டேன். நான் கூறும் வார்த்தைகள் அழிந்து விடலாம். ஆனால் இப்போது இஸ்லாத்தின் எந்த உருவம் உருவாகி இருக்கின்றதோ அது எப்போதும் நிலைத்து நிற்கும்.''

மெஸிடோனியாவிலிருந்து வந்த விருந்தினரான ஒரு பெண் Rodnc Dcolska டி.வி நிருபராக இருக்கின்றார். இவர் கூறுகின்றார்: ''இந்த மாநாடு இஸ்லாத்தின் புதிய திசைகளின் பக்கம் எனக்கு வழிகாட்டி இருக்கின்றது. இத்தகைய ஒரு காலமும் எனக்கு இருந்தது. அப்போது இஸ்லாம் என்ற சொல்லே எனக்கு ஹராமானதாக இருந்தது. இப்போது எனக்கு இஸ்லாம் பற்றிய புதிய அனுபவம் எனக்கு கிடைத்ததற்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த தாக்கங்களை நான் என்னுடன் மெஸிடோனியாவிற்குக் கொண்டு செல்கின்றேன். உங்களைச் சந்தித்தது என் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. இஸ்லாத்தைப் புரிய வேண்டும் என்றால் அதை திருக்குர்ஆனிலிருந்து நேரடியாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் கூறியது சரியான விஷயமாகும். உண்மையான இஸ்லாத்தை அப்படிப்பட்ட பழைமைவாத இஸ்லாத்துடன் இணைக்கக் கூடாது. இதனை சில மக்கள் இன்றைய நாட்களில் வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கின்றனர். இறுதியாக நான் கூற விரும்புவது நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் கூறிய எல்லா பதில்களும் எனக்கு திருப்தி அளிக்கக் கூடியவையாக இருந்தன. நீங்கள் புதிய திசைகளின் பக்கம் எனக்கு வழிகாட்டியுள்ளீர்கள். புதிய அடிவானத்தின் பக்கம் வழிகாட்டியுள்ளீர்கள். நான் இப்போது இஸ்லாத்தின் உண்மையான படத்தைப் பார்த்தேன்.''

பிறகு மெஸிடோனியா தொலைக்காட்சி நிருபரான Calc Ristekski அவர்கள் கூறுகின்றார்கள்: ''இதுபோன்ற கூட்டங்களில் முதன் முறையாக நான் கலந்து கொண்டிருக்கின்றேன். இவை எல்லாம் எனக்கு புதிதாக இருந்தது. நான் முஸ்லிம்கள் பற்றி பலவற்றையும் கற்றுள்ளேன். மாநாட்டில் பணியாற்றுபவர்கள் சோர்வடைந்திருப்பவர்களாக எனக்கு தோன்றவில்லை. (பணி செய்பவர்களின் இந்த நிலை அவர்களுக்கு மிகவும் வியப்பூட்டக் கூடியதாக இருந்தது.) எனக்கு இந்த விஷயம் வியப்பூட்டக்கூடியதாக இருந்தது. இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் மக்கள் ஒரே இடத்தில் அமர்ந்திருக்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தமது பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். எவருக்கும் எந்தப் பிரச்சனையும் ஏற்படவில்லை. இந்த மக்கள் மத்தியில் நானும் இருந்தேன் என்பதில் மகிழ்ச்சி ஏற்பட்டது. இவர்களில் சிலர் எனது நண்பர்களாக ஆகி விடுவர். நண்பர்கள் செல்வமாக இருக்கின்றனர். இந்த மாநாட்டிற்குப் பிறகு சுயமே என்னை நானே செல்வந்தராகக் கருத ஆரம்பித்திருக்கின்றேன்.''

பிறகு மெஸிடோனியாவிலிருந்து வந்திருந்த விருந்தினர் ஒருவரான Rodue Deoloska அவர்கள் தொலைக்காட்சி நிருபராக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ''தொலைக்காட்சி நிருபர் என்ற நிலையில் மாநாடு எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. உலகளாவிய அளவில் நிருபர்களுக்கு ஏதாவது ஒரு புதிய விஷயம் அல்லது சம்பவம் முக்கியமானதாக இருக்கின்றது. நான் என்னை நற்பாக்கியமுடையவனாகக் கருதுகின்றேன். நான் மாநாட்டை நேரடியாகப் பார்த்தேன். அதன் அறிமுகம் எனக்கு கிடைத்தது. மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளும் என் மீது சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த மாநாட்டின் மூலமாக நான் இஸ்லாம் தொடர்பாக பல விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களிடம் நான் நேர்காணல் நடத்தினேன். நான் மெஸிடோனியாவிற்குத் திரும்பிச் செல்லும்போது இந்த எல்லா பதிவுகள் மூலமாக ஒரு டாக்குமென்டரியைத் தயார் செய்வேன். மெஸிடோனிய சமுதாயம் வரை இந்த தூதுச் செய்தியை எட்ட வைப்பேன்.''

லித்வேனியாவைச் சார்ந்த ஒரு விருந்தினர் Augustinas Sulija அவர்கள் கூறுகின்றார்கள்: ''எனக்கு எனது வீட்டில் இருப்பது போன்று தோன்றியது. உங்களது ஜமாஅத் உலகில் பல்வேறு இடங்களிலிருந்து ஒரு குறுகிய நேரத்திற்காக இங்கு ஒன்று சேர்ந்திருக்கின்றது. எல்லா பக்கத்திலிருந்தும் அர்ப்பணிப்பின் ஓர் ஆன்மாவைப் பார்க்க முடிகின்றது. என்னைப் போன்ற அந்நியர் ஒருவருக்கு இது மிகவும் வியப்பை ஏற்படுத்தக்கூடிய விஷயமாக இருக்கின்றது. முற்றிலும் ஒரு புதிய உலகமாக இது இருக்கின்றது. எனக்கு பல்வேறு மதங்களையும்,


**S. MABU**
87541 71700
81240 22479
90955 89992
78719 66352

**STAR ORGANIC**
TERRACE GARDEN DIVISION

- Panchagavya
- Pest Repeller
- See Veed Extract
- All kinds of garden tools

Email: Starorganicmabu@gmail.com
**THARPOLIN + POULTRY EQUIPMENTS SALES**
**TIRUNELVELI DIST.**


## திருக்குர்ஆனிலிருந்து...

உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)

**முஹம்மது ஆதில்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.


**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717


## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.


halal **Grill house**
multi cuisine family restaurant

Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222


## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

நாகரீகங்களையும், பழக்க வழக்கங்களையும், உண்பது குடிப்பது போன்ற விஷயங்களையும், மக்கள் பேணி வருகின்ற மரபுகளையும் பார்ப்பதற்கான நல்வாய்ப்பு கிடைத்ததால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். நீங்கள் அஹ்மதிகளாக இருப்பதனால் ஒவ்வொரு நாளும் ஒரு மகத்தான நோக்கத்திற்காக துன்பங்களை எதிர்கொள்வதும் அதற்காக முயற்சிகளைச் செய்வதும் போற்றுதலுக்குரியதாகும். உங்களது எண்ணங்களும் வழிமுறைகளும் முற்றிலும் சரியானதாக இருக்கின்றது. அதில் உலகளாவிய தன்மை இருக்கின்றது.''

லித்வேனியாவிலிருந்து வந்திருந்த ஒரு விருந்தினர் கூறுகின்றார்: ''ஜமாஅத்தை இந்த அளவு அருகிலிருந்து பார்ப்பது மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றது. இதற்கு முன்னர் எனக்கு முஸ்லிம்கள் பற்றி எதுவும் தெரியாது. இந்த மாநாட்டின் மூலம் எனக்கு பலவற்றையும் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இப்போது ஒரு சிறந்த மனிதனாக நான் எனது வாழ்க்கையைக் கழிக்க முடியும். நான் ஒரு நல்ல மனிதனாக ஆவதற்கு இந்த மதத்தின் போதனைகள் எனக்கு உதவக்கூடியதாகவும் ஒத்துழைப்பு தரக்கூடியதாகவும் நிரூபிக்கப் –பட்டிருக்கின்றது. இங்கு மக்கள் என்னுடன் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டனர்.''

நம்மவர்களோடு கலந்து கொண்டு அந்நியர்களும் ஒரு மாற்றத்தை உணர்கின்றனர். ஆனால் நமக்காக இந்த மாநாடுகள் நடத்தப்படும்போது நாம் எந்த அளவு முயற்சி செய்து நம்மிடத்தில் மாற்றங்களை உருவாக்க வேண்டும்? ''இங்கு நான் ஒருவன் மட்டுமே விருந்தாளியாக இருப்பதுபோன்று உணர்ந்தேன். ஒவ்வொருவரும் எனது சுகத்தைக் கருத்தில் கொண்டு செயல்படுபவராக இருந்தனர். நான் இந்த விஷயங்களை மிகவும் பாராட்டுகின்றேன்'' என்று இவர் கூறுகின்றார்.

லித்வேனியாவிலிருந்து வந்திருந்த ஒரு விருந்தினர் Mrs. Ingrida கூறுகின்றார்: ''இந்த மாநாட்டில் முதன் முறையாக நான் கலந்து கொள்கின்றேன். ஆனால், இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் மாநாட்டில் கலந்து கொண்டது எனக்கு வியப்பாக இருந்தது. அங்கு பல்வேறு மதங்களைச் சார்ந்த பல நாகரிகங்களைக் கொண்டிருந்த மக்கள் ஒன்று திரண்டிருந்தனர். அவர்களில் அனைவரும் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்பவர்களாக இருந்தனர். இரண்டாவதாக, இந்த நிகழ்ச்சியின் அழகிய அமைப்பும் வியப்பூட்டக்கூடியதாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு கலீஃபா அவர்களைச் சந்தித்த பிறகு ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற எனது ஆர்வம் இன்னும் அதிகரித்து விட்டது. நான் உங்களது நூல்களைக் கண்டிப்பாக படிப்பேன். ஏனென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவிலிருந்து எந்த விஷயங்கள் இங்கு கூறப்பட்டனவோ அவை அறிவு ஏற்றுக் கொள்ளத்தக்க விஷயமாக இருக்கின்றது. இந்த எனது அனுபவம் நன்றாக இருந்தது. இப்போது நான் அடுத்த வருடம் இந்த மாநாட்டிற்காகக் காத்துக் கொண்டிருப்பேன்.''

ஆனால், இவர் ஜெர்மனியில் உள்ளவர் –களுக்கு ஓர் ஆலோசனையைக் கூறியுள்ளார். இடைவேளைகளில் பல்வேறு கண்காட்சிகளும் நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. அவற்றில் கலந்து கொள்வது தொடர்பாக அதிகமான தகவல்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் அவற்றில் சிறந்த நிலையை ஏற்படுத்த முடியும் என்று இவர் கூறுகின்றார்.

இவ்வாறே Kosovo –விலிருந்து 18 நபர்களைக் கொண்ட குழு வந்திருந்தது. இவர்களில் ஜமாஅத்தைச் சாராத ஒரு நபரும் 17 அஹ்மதிகளும் இருந்தனர்.

Estonia –விலிருந்து வந்திருந்த ஒரு பெண் விருந்தினர் Laura அவர்கள் கூறுகின்றார்: ''நான் ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகளைப் பார்த்து மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். மாநாட்டு அமைப்பானது எல்லா வகையிலும் வசதிகளை ஏற்படுத்துவதற்காக தொடக்கத்திலேயே சிந்தித்துச் செயல்பட்டிருப்பது போன்று தோன்றுகிறது. எல்லா விதமான தேவைகள் மற்றும் பிரச்சனைகளுக்கான தீர்வு அங்கு இருந்தது. ஒரு விருந்தினர் என்ற நிலையில் எனக்கு கண்ணியம் அளிக்கப்பட்டது. எல்லா வகையிலும் என்னை கருத்தில் கொண்டிருந்தனர். ஆண்டு மாநாட்டின் பொதுவான சூழல் மிகவும் சிறப்பாக இருப்பதை நான் கண்டேன். மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் அமைதி நிறைந்தவர் –களாகவும் நண்பர்களாகவும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்பவர்களாகவும் இருந்தனர். நல்ல மக்கள் பலரையும் சந்தித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். அவர்கள் ஜமாஅத் தொடர்பான தங்களது அனுபவங்களை உணர்வுகளால் நிரம்பியவாறு நல்ல முறையில் எடுத்துக் கூறினர். நான் ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவுகளைக் கேட்டேன். குறிப்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவிலிருந்து முழுமையாக இன்பத்தைப் பெற்றேன். அந்த சொற்பொழிவு தற்கால நிலைமைகளைப் பற்றியதாக இருந்தது. அந்த சொற்பொழிவுகளிலிருந்த தூதுச்சொய்தி மிகவும் தெளிவாக இருந்தது. அவற்றில் புதிய எண்ணங்கள் இருந்தன; புதிய புரிதல் இருந்தது. அவற்றை நான் என்னுடன் எடுத்துச் செல்வேன்.''

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் நிறைவுரை பல விஷயங்களைச் சிந்திக்கும் கட்டாயத்திற்கு நம்மை ஆளாக்கி விட்டது. அது என் மீது சிறப்பானதொரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. உண்மையிலேயே உள்ளத்தை தொடக்கூடிய அனுபவமாக அது இருந்தது.

அல்பேனியாவிலிருந்து 48 நபர்களைக் கொண்ட ஒரு குழு மாநாட்டில் கலந்து கொண்டது. இவற்றில் 19 அஹ்மதிகள் இருந்தனர். மேலும் 29 அஹ்மதி அல்லாத அல்பேனியர்கள் இருந்தனர். 43 மணி நேரம் பயணம் செய்து இவர்கள் வந்து சேர்ந்தனர். இவர்களது அரசாங்கத்தின் தரப்பிலிருந்து இரு விருந்தினர்கள் வந்திருத்தனர். அவற்றில் ஒருவர் Chairman of State Commitee on Civics ஆவார்.

இவ்வாறே ஹங்கேரியிலிருந்து 20 நபர்களைக் கொண்ட ஒரு குழு ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டது. இவர்களில் 11 பேர் அஹ்மதிகள் ஆவர். மற்ற விருந்தினர்கள 9 பேர்கள் ஆவர்.

ஒரு விருந்தினரான ஆகேயா ஆயாஷ் என்ற பெண், இவரது அசல் நாடு ஆர்மீனியா ஆகும். ஹங்கேரியில் இவர் வசிக்கும் நகரத்தில் சமுதாயத்தில் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முக்கிய பிரமுகராக இவர் இருக்கின்றார். ஆர்மேனியாவிலுள்ள Armenian Minonity Cabinet –ன் கருத்துக்களை எடுத்துக் கூறுபவராக இவர் இருக்கின்றார். அமெரிக்காவில் உள்ள ஒரு முபல்லிக் கூறுகின்றார்: ஒரு நாள் மாலை மாநாடு நிறைவடைந்த சமயத்தில் சுயமே இவர் ஆயிரக்கனக்கான முஸ்லிம் ஆண்களுக்கு மத்தியில் நான் அச்சமின்றி உலாவிக் கொண்டிருக்கின்றேன். இங்கு எல்லா நபர்களும் நாகரிகத்துடன் நடந்து கொள்பவர்களாகவும் மென்மையான இயல்பை உடையவர்களாகவும் ஒழுங்குமுறைகளை பேணுபவர்களாகவும் பெண்களுக்கு மதிப்பளிக்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். ஊடகங்களில் இடம்பெயர்ந்து வந்தவர்கள், அதிலும் குறிப்பாக முஸ்லிம்கள் நாகரிகமற்றவர்களாகவும் பெண்களுடன் சரியான முறையில் நடந்து கொள்ளாதவர்களாகவும் இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. அவர்கள் இங்கு வந்து முஸ்லிம் சமுதாயம் எந்த அளவு சிறந்த முறையில் மற்றவர்களுடன் நடந்து கொள்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும்.

இவர் கூறுகின்றார்: ''ஒரு சிறுவர் என்னிடம் வந்தான். நீங்கள் யார்? எங்கிருந்து வந்துள்ளீர்கள்? என்றெல்லாம் அவன் என்னிடம் கேட்கவில்லை. மாறாக, எனக்கு முன்னால் அதிகமாக தண்ணீர் இருந்த கிளாஸை வைத்தான். நான் தண்ணீர் குடித்த பிறகு இன்னொரு சிறுவன் எனக்கு பின்னாலிருந்து

## திருக்குர்ஆனிலிருந்து...

*மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர்.*

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

வந்தான். அவன் காலியாக இருந்த கிளாஸை என்னிடமிருந்து பெற்றுக் கொண்டான். இங்கு சிறுவர்கள், பெரியவர்கள் அனைவருமே அன்பின் தூதுவர்களாக இருக்கின்றனர்.''

மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை இவருக்கு கூறப்பட்டபோது இவர், கிறித்தவர்கள் இதை விட பத்து மடங்கு இங்கு மாநாட்டில் கலந்து கொண்டு நாகரிகமுள்ள சமுதாயத்தில் அவர்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு எவ்வாறு மதிப்பளிக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

ஹங்கேரியிலிருந்து வந்திருந்த கேபர் தாமஸ் என்ற விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: ''எத்தகைய மார்க்க சூழல், அமைதி மற்றும் மனிதத் தன்மையை இங்கு பார்க்ககூடிய சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அதிலிருந்து பயன் பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அதுபோல் உலகில் வேறு எங்கும் பார்க்க முடியவில்லை. அமெரிக்காவிலும் பாதிரியாராக ஒரு நீண்ட காலம் நான் பணியாற்றியுள்ளேன். உலகை அதிகமாக பார்த்துள்ளேன். ஆனால் இத்தகைய ஒரு சுற்றுச் சூழலை இன்று வரை எங்குமே நான் பார்த்ததில்லை. அஹ்மதிகள் நற்பேறு பெற்றவர்களாவர். இவர்களிடம் ஒரு தலைவர் இருக்கின்றார். அந்த தலைவர் அஹ்மதிகளை நேசிக்கின்றார். அவர்களுக்கு வழிகாட்டுகின்றனர். இந்த மாநாட்டில் கலந்து கொண்டு எனது ஈமான் உறுதியாகி இருப்பதை நான் உணர்கின்றேன்.''

இவர் கூறுகின்றார்: ''உங்களது ஜமாஅத் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றது. கிறித்தவர்களாகிய நாங்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கின்றோம். எங்களது ஆலயங்கள் காலியாகிக் கொண்டிருக்கின்றன. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமிடம் இது பற்றி கேட்டபோது அவர்களும் பௌதீகம் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. ஆன்மீகம் குறைந்து கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே இவை எல்லாம் நடக்கின்றன என்று கூறினார்கள்.''

நமக்கு ஒரு எஜமானன் இருக்கின்றான். அவனை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவே உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று மக்களுக்கு நாம் எடுத்துக் கூற வேண்டும் என்று இவர் கூறுகின்றார். நான் கூறிய அந்த மேற்கோளை இவர் எடுத்து கூறியுள்ளார்.

சிரியாவைச் சார்ந்த நண்பர் அக்ரம் சாஹிப் கூறுகின்றார்: ''எனக்கு ஒரு மாதத்திற்கு முன்புதான் ஜமாஅத் பற்றிய அறிமுகம் கிடைத்தது. அஹ்மதிகளின் ஒரு கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். அங்கு முதன் முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி கேள்விப்பட்டேன். பிறகு நான் எனது குடும்பத்துடன் மாநாட்டிற்கு வந்தேன். அங்கிருந்த மக்கள் மிகவும் நல்ல முறையில் விருந்தோம்பல் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். தங்களது கொள்கைகளைப் பற்றி மிகவும் அன்புடனும் பரிவுடனும் அவர்கள் எங்களிடம் பேசினர். நான் மாநாட்டில் ஒரு விஷயத்தை அற்புதமாகக் கருதுகின்றேன். அதாவது, இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் வந்திருந்தும் கூட மூன்று நாட்களும் ஒரு முறை கூட எந்த சண்டை சச்சரவும் ஏற்படவில்லை. ஹஜ்ஜின்போது கூட சில நேரங்களில் மக்கள் பரஸ்பரம் தங்களுக்கிடையில் சண்டையிடுகின்றனர். ஆனால், இங்கு எவரையும் நான் ஒருவருக்கு எதிராக உரத்த குரலில் பேசியதைப் பார்க்கவில்லை. இன்னொரு விஷயத்தையும் நான் அற்புதமாகக் கருதுகின்றேன். அதாவது, அஹ்மதி விருந்தினர்கள் பெண்களைக் கண்ணியமிக்க பார்வையுடன் பார்க்கின்றனர். எதுவரையென்றால் எனது மனைவி என்னிடம் என்னால் எவரும் அசுத்தமான பார்வையுடன் எங்களை பார்ப்பதைக் காண முடியவில்லை என்று கூறினார்.''

அஸாமா அபூ முஹம்மது ஹலபி அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஆண்டு மாநாட்டில் இந்த அளவு அதிக எண்ணிக்கையில் மக்கள் வந்திருந்தும் கூட ஒழுங்குமுறையும் கட்டுக்கோப்பும் சிறந்த முறையில் இருந்தது. அங்கு அமைதிக்கான திட்டங்களும் வகுக்கப்பட்டன. இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் மக்கள் வந்திருந்தும் கூட பணியாளர்களின் தொண்டு இணையற்றதாக இருந்தது. நமது அஹ்மதி சகோதரர்கள் வசதியை ஏற்படுத்தித் தருவதிலும் மிகவும் அழகிய முறையில் எங்களுக்கு தொண்டு செய்துள்ளனர். இவர்களது சொல்லிலும் செயலிலும் பல இஸ்லாமிய பிரிவுகளிடம் இல்லாத அந்த உண்மை தெரிய வந்தது. நான் அஹ்மதி அல்ல. ஆனால், உங்களது எல்லா பணிகளையும் புகழ்ந்து கூறாமல் என்னால் இருக்க முடியாது.

சிரியாவைச் சார்ந்த நண்பர் மஹ்மூது சாஹிப் அவர்கள் போலந்தில் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ''அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு எனது உள்ளம் மகிழ்ச்சியின் உணர்வுகளால் நிறைந்து விட்டது. ஒரேயொரு சொற்பொழிவில் அவர்கள் உலகிலுள்ள எல்லா பிரச்சனைகளுக்குரிய தீர்வைக் கூறி விட்டார்கள். பல்வேறு நாடுகளுக்கிடையில் எவ்வாறு அமைதியை நிலைநாட்ட முடியும் என்பதைப் பற்றி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் அதற்கான தீர்வையும் கூறினார்கள். இதன் காரணமாக நான் முஸ்லிமாக இருப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.''

பிறகு இன்னொரு விருந்தினரான Grunniger அவர்கள் கூறுகின்றார்: ''அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்வது மற்றும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வது தொடர்பாக எடுத்துக் கூறினார்கள். இன்று உலகிற்கு இந்த விஷயம் தேவைப்படுகின்றது. அவர்களது சொற்கள் உலகின் தற்கால நிலைமைகளைப் பற்றி சிந்திக்கின்ற கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கி விட்டது. திருக்குர்ஆன் வசனங்களை மேற்கோளாகக் காட்டி இஸ்லாம் ஒருபோதும் ஒரு தீவிரவாத மார்க்கமல்ல என்பதை அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறி விட்டார்கள். மேலும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் எத்தகைய மனிதராக இருந்தார்கள் என்றால் பகைவர்களைக் கூட அன்னார் மன்னித்து விட்டார்கள் என்று அவர்கள் கூறினார்கள். கலீஃபாவின் இந்த சொற்பொழிவைக் கேட்ட பிறகுதான் உண்மையில் இஸ்லாம் என்றால் என்ன? என்பது முதன் முறையாக எனக்கு புரிந்தது. இஸ்லாம் அன்பு மற்றும் நேசத்தின் மார்க்கமாகும். ஊடகங்கள் காட்டுவது போன்று ஒருபோதும் இல்லை.''

ஜெர்மனியில் கடந்த மூன்று வருடங்களாக பைஅத் நிகழ்ச்சியும் நடக்கின்றது. இந்த வருடம் மாநாட்டின்போது 11 நாடுகளுடன் தொடர்புள்ள 33 நபர்களுக்கு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அல்பேனியா, கேம்பியா, கானா, ஜெர்மனி, ஈராக், யமன், மொராக்கோ, பாலஸ்தீனம், சிரியா, துருக்கி, லித்வேனியா ஆகிய நாடுகளைச் சார்ந்தவர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர்.

அஸ்டோனியாவிலிருந்து வந்து பைஅத் செய்கின்ற நற்பாக்கியம் பெற்ற லமீஸ் அப்துல் ஜலீல் சாஹிபா கூறுகின்றார்: ''நான் பாலஸ்தீனத்தைச் சார்ந்தவள் ஆவேன். அஸ்டோனிய இளைஞரை திருமணம் செய்தவள் ஆவேன். நான் இரண்டாவது முறையாக

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள்
சகோதரர்கள் ஆவர். எனவே
சகோதரர்களுக்கிடையில் நீங்கள்
சமாதானத்தை ஏற்படுத்துங்கள்.
உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு,
நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.
(49:11)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள்
என நான் என் ஜமாஅத்திற்கு
அறிவுறுத்துகிறேன். ஏனென்றால்
கண்ணியமிக்க நமது இறைவனின்
பார்வையில் ஆணவம்
வெறுக்கத்தக்கதாகும்.*

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள்
உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக்
கவனத்தையும் செலுத்துகிறார். எனவே
நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர்
முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள்
எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை
ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

மாநாட்டில் கலந்து கொள்கின்றேன். முதன் முறையாக மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு ஜமாஅத் தொடர்பாக எனக்கு ஏற்பட்ட பல்வேறு சந்தேகங்களுடன் நான் திரும்பிச் சென்றேன். ஆனால், இந்த முறை நான் மாநாடு நடந்து கொண்டிருந்த தருணத்தில் இறைவன் எனக்கு நேரான வழியைக் காட்ட வேண்டும் என்று அதிகமாக துஆ செய்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத் எனக்கு சரியான வழியாகவும் வாழ்வைக் கழிப்பதற்கான சரியா வழிமுறையாகவும் இருந்தால் நீயே எனக்கு நேர்வழியைக் காட்டுவாயாக என்று துஆ செய்தேன். அடுத்த நாள் பைஅத் செய்து விட்டேன். அல்லாஹ் எனக்கு ஆறுதலை வழங்கினான். நான் என்னை நற்பாக்கியமுள்ளவளாகக் கருதுகின்றேன். அதாவது, இந்த அளவு அதிகமான மக்கள் நான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும் அஹ்மதியாக ஆவதற்காகவும் துஆக்கள் செய்துள்ளனர். கடந்த வருடம் எனக்கு ஆண்டு மாநாட்டின் எல்லா சொற்பொழிவுகளையும் கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் இந்த வருடம் எல்லா சொற்பொழிவு –களையும் மிகவும் கவனத்துடன் நான் கேட்டேன். அதன் காரணமாக அல்லாஹ் எனது உள்ளத்தில் இந்த ஜமாஅத் தான் உண்மையானது என்ற உறுதியை ஏற்படுத்தினான். அதனால் நான் பைஅத் செய்து விட்டேன்.''

இவர் கூறுகின்றார்: ''இங்கு பார்த்தது போன்ற பெண்களிடம் காணப்பட்ட சகோதர உணர்வை வேறு எங்கும் என்னால் பார்க்க முடியவில்லை. பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த பெண்களுடன் நான் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டேன். ஒருவேளை இதற்குப் பிறகு எப்போதும் அவர்களை நான் சந்திக்க முடியாமல் போகலாம். ஆனால், எப்போதும் அவர்களை எனது துஆக்களில் நான் நினைவு கூர்வேன். நான் அஹ்மதியானதும் இந்த ஜமாஅத்தில் இணைந்ததும் ஆகிய இவை அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டத்திற்கேற்பவே நடந்தது.''

இவை ஆண்டு மாநாடு தொடர்பான சில தாக்கங்களாகும். அவற்றை நான் எடுத்துக் கூறினேன். அல்லாஹ்வின் அருளால் மாநாடு பலரது நெஞ்சங்களையும் திறக்கின்றது. பலரது சந்தேகங்களையும் அகற்றுகின்றது. இஸ்லாத்தின் உண்மையான படம் அவர்கள் முன்னால் வருகின்றது. அல்லாஹ் இந்த அருள்களை எப்போதும் பரப்பிக் கொண்டே செல்வானாக.

மீடியா கவரேஜ் அடிப்படையில் பார்க்கும்போது மாநாட்டின் முதல் நாளில் ஜுமுஆவிற்குப் பிறகு என்னுடன் ஒரு Press Conference –ம் நடைபெற்றது. அதில் National மற்றும் International மீடியாக்கள் கலந்து கொண்டன. International மீடியாவில் இத்தாலி, மெஸிடோனியா, ஆஸ்ட்ரியா, பிரேசில் மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளின் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தேசிய அளவில் ஜெர்மனியின் நான்கு தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் மூன்று பிரஸ் மீடியாவின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். உள்ளூர் அளவில் டி.வி., ரேடியோ மற்றும் நான்கு பிரஸ் மீடியாவின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். ஒட்டுமொத்தமாக ஜெர்மனியில் இந்த மூன்று நாட்களும் ஆண்டு மாநாட்டின் கவரேஜ் இருந்தது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு ஏற்ப ஐந்து டி.வி சேனல்கள் மற்றும் ஏனைய பிரஸ் மீடியாக்கள் மூலம் 5 கோடியே 52 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வரை தூதுச்செய்தி எட்டியிருக்கின்றது. இது தவிர International மீடியாக்களில் அடுத்த வாரம் வரை நாம் கவரேஜை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். பிரதிநிதிகளும் இதைப் பற்றி குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் கூறியதற்கிணங்க 4 கோடிய 13 இலட்சத்திற்கும் அதிகமான நபர்கள் வரை தூதுச்செய்தி சென்று சேரும்.

இவ்வாறே Al-Islam Website –ல் ஜெர்மன் ஆண்டு மாநாட்டின் கவரேஜ் ஜெர்மனியிலுள்ள M.T.A Studio –வின் ஒத்துழைப்பின் மூலமாக மாநாட்டு நிகழ்ச்சிகள் Upload செய்யப்பட்டது. Central Press மற்றும் Media Office தரப்பிலிருந்தும் வெளியிடப்பட்ட Press Release –ம் Upload செய்யப்பட்டது. Social Media –விலும் ஆண்டு மாநாட்டின் கவரேஜிற்கான பணிகள் நடந்தன. இதில் Facebook –ல் 32 Posts வெளியிடப்பட்டன. அதனை 4 இலட்சத்து 20 ஆயிரம் பேர் பார்த்தனர். 36 ஆயிரம் பேர் Posts Like செய்திருந்தனர். இவ்வாறே Twitter –லும் 5 இலட்சத்தி 36 ஆயிரம் பேர் மாநாடு தொடர்பான Twit –ஐப் பார்த்தனர். 5 ஆயிரத்து 800 பேர் Retwit செய்துள்ளனர்.

மாநாடு தொடர்பான சில பலவீனங்களும் இருக்கின்றன. சுருக்கமாக அவற்றைக் கூறுகின்றேன். ஏற்கனவே நான் கூறியதுபோன்று மக்கள் மாநாட்டுத் திடலுக்கு வெளியே இங்குமங்கும் சென்று கொண்டிருந்தனர். வருங்காலத்தில் தர்பிய்யத் துறை இவ்விஷயத்தில் துடிப்புடன் செயல்பட வேண்டும். மற்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும்போது மக்கள் வெளியில் செல்லாமல் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். முதல் நாளில் ஓசை சென்றவடைவதற்கான ஏற்பாடு குறிப்பாக ஜுமுஆ நேரத்தில் சரியாக இருக்கவில்லை. சில Techinical பிரச்சனைகள் இருந்தன. பிறகு அதில் நல்ல நிலைமையை ஏற்படுத்தினர். ஜெர்மன் ஜமாஅத் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பிறகு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நேரத்தில் இரைச்சல் இருந்தது என்று புகார்கள் வந்துள்ளன. எனவே, மொழிபெயர்ப்பிற்காக பொருத்தப்படும் கருவிகளை சரிசெய்ய வேண்டும். மாநாட்டிற்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை வழக்கத்திற்கு மாற்றமாக அதிகமாக இருந்தது. நாம் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருந்தது. ஆனால் 400 பேர்களுக்கு படுக்கை கிடைக்கவில்லை. இது ஒன்றும் பெரிய விஷயமல்ல என்றாலும் வருங்காலத்தில் ஜெர்மனி ஜமாஅத் இதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

மாநாட்டுத் திடலில் கட்டுக்கோப்புடன் கூடிய ஒழுங்குமுறையில் சில குறைகள் இருந்தன. இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. ஹாலின் குளிர்சாதன அமைப்பில் இருந்த ஒரு இயந்திரம் பழுதடைந்து விட்டது. இதன் காரணமாக ஹாலுக்குள் அதிகமான வெப்பம் இருந்தது. இங்கும் U.K –வில் கூட கூடாரத்திற்குள் அமர்கின்ற மக்கள் அதிகமாக வெப்பம் இருந்தாலும் கூட அமைதியாக அமர்ந்திருக்கின்றனர். எனவே, இது ஒரு சாக்காக இருக்கக் கூடாது. தர்பிய்யத் துறை இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். முழு வருடமும் அஹ்மதிகளுக்கு இதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். சில குறைகளை நான் எழுதியும் அனுப்பி இருக்கின்றேன். அதைப் பற்றி அவர்களும் சிந்திக்க வேண்டும். அவற்றை சரி செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

இரண்டாவது விஷயம், உணவு தொடர்பாகவும் புகார்கள் வந்து கொண்டிருந்தன. முதல் நாளன்று வந்திருந்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப உணவு தயார் செய்யப்படவில்லை. அடுத்த நாள் சிறந்த ஏற்பாடு இருந்திருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்னவென்றால், குழம்பு தீர்ந்து போய் விட்டது. இறுதியில் அவசரமாக எப்போதும் சமைக்கப்படும் பருப்புதான் சமைக்கப்பட்டது. பல மக்களுக்கும் பருப்புதான் கிடைத்தது. எனவே, இதன் பக்கமும் அதிக கவனம் செலுத்த வேண்டும். முழுமையான முறையில் நன்றாக திட்டமிட வேண்டும்.

அல்லாஹ் பணியாற்றிய அனைவருக்கும் எதிர்காலத்தில் தமது பணிகளில் சிறந்த நிலைமையை உருவாக்குவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இந்த சுற்றுப் பயணத்தின்போது ஒரு பள்ளிவாயிலை திறந்து வைப்பதற்கான நல்வாய்ப்பும் கிடைத்தது. அல்லாஹ்வின் அருளால் இதனால் நல்ல தாக்கமும் விருந்தினர்களிடம் ஏற்பட்டது. அவர்கள் பகிரங்கமாக இஸ்லாம் ஜெர்மனியில் பரவ வேண்டும் என்று கூறினர். இந்த நிகழ்ச்சியும் நன்றாக கவரேஜ் செய்யப்பட்டது. இதற்கு டி.வி சேனல்கள் மற்றும் இரண்டு பத்திரிகைகளின் பிரதிநிதிகள் இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். இந்த பள்ளிவாயில் தொடக்க நிகழ்ச்சி பற்றி செய்தி மீடியாக மூலமாக 16.5 இலட்சம் மக்கள் வரை எட்டியது. இஸ்லாத்தின் தூதுச்செய்தி அவர்களுக்கு எட்டியது.

அல்லாஹ் ஜெர்மனி ஜமாஅத்திற்கு எதிர்காலத்தில் இதை விட அதிகமாக அவர்களுக்கு இஸ்லாத்தின் தூதுச்செய்தியை பிறருக்கு எட்ட வைக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக. இப்போது ஏற்பட்டுள்ள அறிமுகத்தில் இன்னும் விரிவான நிலையை ஏற்படுத்தும் நல்வாய்ப்பையும் அல்லாஹ் வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.

**மர்ஹூம் A.N.A. ஹா:பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.


0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com

**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



276, N.H. Road, Coimbatore - 641 001.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.


**திருக்குர்ஆனிலிருந்து...**

தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)

**முஹம்மது ஹுஸைன்**
பழனி


Q4Q
**Bamboo Village**
MULTI CUISINE RESTAURANT

Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்-றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்-களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.


A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

**METAPLAST**
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.

Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.


**ரஹ்மானியா**
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.

**S.S. அஸன் அபூபக்கர்**
✆ 94869 37769


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர்-களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.


M. Abdul Raoof
✆ +91 9362 2272 29

**SUCCESS INDIA**
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 5 October 2017 Issue No. 40

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## காதியானிலுள்ள நஷ்ரோ இஷாஅத் (வெளியீட்டுத் துறை) -யில் உள்ள DTP மையத்தில் பணியாற்ற விருப்பமுள்ள பெண் பணியாளர்கள் தேவை

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நஸாரத் நஷ்ரோ இஷாஅத்தில் உள்ள DTP –யில் ஒரு கம்பியூட்டர் ஆப்பரேட்டரின் தேவை இருக்கின்றது. இதில் பணியாற்ற விரும்பும் லஜ்னாக்கள் நஸாரத் தீவானிலிருந்து இதற்கான படிவத்தைப் பெற்று அதை நிரப்ப வேண்டும். பிறகு Attested செய்யப்பட்ட தங்களது அனைத்து கல்விச் சான்றிதழ்களின் நகல்களையும், பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தையும் ஜமாஅத்தின் அமீர், ஜமாஅத் தலைவர், லஜ்னா தலைவி ஆகியோரது உறுதிப்படுத்தும் கையெழுத்துடன் நஸாரத் தீவானிற்கு இரண்டு மாதங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

1. பணியாற்ற விரும்புபவர் குறைந்தபட்சம் 12 –ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். அதில் Second Division –ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. ஹிந்தி, உருது, அரபி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை எழுதுவதற்கும் படிப்பதற்கும் தெரிந்திருக்க வேண்டும்.

3. ஹிந்தி டைப்பிங் செய்வதில் திறமை பெற்றவராக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் அதில் ஒரு வருட கால அனுபவம் இருக்க வேண்டும். Keyboard –ஐப் பார்க்காமலேயே ஹிந்தி டைப்பிங்கை கம்போஸ் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு மணி நேரத்தில் குறைந்தபட்சம் 3000 சொற்களை அவரால் டைப் செய்ய முடிய வேண்டும்.

4. ஹிந்தி டைப்பிங்கை In-Design Software –ல் Chanaky - Unicode ஃபாண்டில் செய்யத் தெரிந்திருக்க வேண்டும்.

5. Computer Science -ல் டிப்ளமா படித்திருக்க வேண்டும்.

6. In-Design MS Word Inpage பற்றிய அடிப்படையான விஷயங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.

7. வக்ஃபே ஸிந்தகீ அல்லது வக்ஃபே நவ் திட்டத்தில் பங்கு பெற்றுள்ள உறுப்பினர்கள் தங்களது வக்ஃபே நவ் தொடர்பான எண்ணை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

8. விண்ணப்பத்தில் தனது தந்தை / கணவர் / காப்பாளர் ஆகியோரது உறுதிப்படுத்தும் கையெழுத்தும் இடம்பெற்றிருக்க வேண்டும்.

9. பணி செய்ய விரும்புபவருடன் நடைபெறும் நேர்காணல் எந்த தேதியில் நடைபெறும் என்பது பற்றி பின்னர் தகவல் தெரிவிக்கப்படும். நேர்க்காணலிற்காக காதியான் வருவதற்கும் திரும்பிச் செல்வதற்குமுள்ள செலவுகளை பணி செய்ய விரும்புபவர் தாமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. காதியானில் தங்குவதற்கான ஏற்பாட்டை தாமே செய்து கொள்ள வேண்டும்.

(நாஸிர் தீவான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா – காதியான்)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

ஆரியரான ஷரம்பத்தும் இதற்கு சாட்சியாக ஆகி விட்டார். இறைவனின் இல்ஹாமின் பொருள் அதே சமயத்தில் ஏன் திறந்து தரப்படவில்லை என்று கேட்பதாக இருந்தால் அதற்கான பதிலை நான் கூறுகின்றேன். திருக்குர்ஆனிலுள்ள முகத்தஆத்தின் (சுருக்கெழுத்துக்களின்) பொருள்கள் இதுவரை ஏன் திறந்து தரப்படவில்லை? طٰهٰ (தாஹா) என்றால் என்ன? نٓ (நூன்) என்றால் என்ன? كٓهٰيٰعٓصٓ (காஃப், ஹா, யா, அய்ன், ஸாது) என்றால் என்னவென்று யாருக்குத் தெரியும்? سَيُهْزَمُ الْجَمْعُ என்ற வசனம் தொடர்பாக இதுவரை எனக்கு அதன் பொருள் தெரியவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீஸில் இருக்கின்றது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுவர்க்கத்தின் திராட்சைக் கொத்து ஒன்று அபூஜஹிலிடம் கொடுப்பதற்காக என்னிடம் தரப்பட்டது. அதற்கான விளக்கத்தை அபூஜஹிலின் மகனான இக்ரிமா முஸ்லிம் ஆகாத வரை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறியுள்ளார்கள். நான் ஹிஜ்ரத் செய்து செல்கின்ற இடம் எனக்கு கூறப்பட்டது. ஆனால் அது மதீனா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சுருக்கமாக, அத்தகைய ஆட்சேபனைகள் அல்லாஹ்வின் நடைமுறையைப் பற்றி தெரியாததன் காரணமாகவே உள்ளங்களில் உருவாகின்றது.

**அறுபத்தி மூன்றாவது அடையாளம்:** கொலை போன்ற குழப்பத்தில் இருந்து நான் காப்பாற்றப்படுவேன் என்று என்னைப் பற்றி பராஹீனே அஹ்மதிய்யாவில் இறைவனின் இந்த முன்னறிவிப்பு இடம் பெற்றுள்ளது. அதற்கேற்ப என் மீது பல்வேறு தாக்குதல்கள் நடத்தப்பட்ட பிறகும் கூட இறைவன் எதிரிகளின் தீங்கிலிருந்து என்னைக் காப்பாற்றி விட்டான்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 231-234)

## வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது காதியான் அவர்களுக்கு ஹுஸூர் அவர்கள் எழுதியுள்ள கடிதம்

மதிப்பிற்குரிய வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது காதியான் அவர்களுக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு. 10 ஜுன் 2017 –ல் தாங்கள் எனக்கு எழுதிய கடிதம் கிடைத்தது. ஜஸாகுமுல்லாஹ்.

அல்லாஹ் தனது சிறப்பான அருளால் இவ்வருடமும் தியாகம் செய்துள்ள கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்களுக்கு முன்பை விட அதிகமாக பொருள் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அவர்களது பொருளிலும் உயிரிலும் அருளை வழங்குவானாக. அல்லாஹ், தஹ்ரீகே ஜதீதின் அனைத்துப் பணியாளர்களையும் இன்ஸ்பெக்டர்களையும் தனது குறிப்பான அருள்களுக்கு வாரிசாக்குவானாக. எப்போதும் இறைவனால் ஏற்றுக் கொள்ளத்தக்க மார்க்கத் தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்கி கொண்டே செல்வானாக. ஒவ்வொரு நொடியும் உங்களது பாதுகாவலனாகவும் உங்களை கண்காணிக்–கின்றவனாகவும் அவ்விறைவன் இருப்பானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்

**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad